
உ



அராலியூர்
செல்லத்துரை மாணிக்கம் தம்பதிகளின் புதல்வரும்
திருமதி. பாலாம்பிகை அவர்களின் துணைவருமாகிய

# அமரர்
# திரு. செல்லத்துரை அரியநாயகம்

அவர்களின் அமரத்துவம் குறித்த

# நினைவு மலர்

02-04-2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
சிவமயம்

எங்கள் அன்புத் தெய்வத்திற்குச்
சமர்ப்பணம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இன்று வானுறை
தெய்வமாகிவிட்ட எங்கள் குடும்பத்தலைவர்

# திரு. செல்லத்துரை அரியநாயகம்

அவர்களின் குல தெய்வமாகிய அராலி ஆவரம்பிட்டி
ஸ்ரீ முத்துமாரியம்மனை நெஞ்சுருக வணங்கி
அம் மாகா சக்திக்குரிய சில விரதங்களிலும் பூசைகளிலும் பாடும்
பாசுரங்களையும் பதிகங்களையும் தொகுத்து காணிக்கையாக
அளிக்கின்றோம்.

-குடும்பத்தவர்கள்-





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# அமரர்
# திரு. செல்லத்துரை அரியநாயகம்

அன்னை மடியினில்
09-07-1930

ஆண்டவன் அடியினில்
03-03-2013

## திதி வெண்பா

மங்கள மாம்நந்தன ஆண்டு மாசித்
திங்கள் அபரபக்ஷ ஷப்தமித்திதியில் - அராலியுறை
செம்மல் செல்லத்துரை அரியநாயகம் முத்துமாரி
அம்மன் அடிசேர்ந்தார் அறிந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பு
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோத நித்திலங் கொழிக்கும்
கோணமா மலையமர்ந் தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்கள் குளிர்ந் தனவே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்(று) அருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புஉண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுஉன் அடியின்கீழ் இருக்க வென்றார்.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

## திருமந்திரம்

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே

அன்புஞ் சிவமும் இரண்டென்பரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந் திருந்தாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவபுராணம்
திருச்சிற்றம்பலம்

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க

வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி

ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண் நுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண் இறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா
பொய்யா யினவெல்லாம் போய் அகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அளிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனம் கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்து இருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டிப்
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்குமூடி
மலம்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேர் ஆறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆர் உயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்ச்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தில்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்று இன்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண் ஆர் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்து இருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பரம்
குருநமச்சிவாயதேவர் அருளிய

# நமச்சிவாய மாலை

காப்பு

மந்திர நமச்சிவாய
மாலைநான் செப்புதற்குக்
கந்தவேள் தனக்கு மூத்த
கணபதி காப்புத்தானே

அறைமறை யயனுமாலும் அமரரு முனிவர் தாமும்
முறைமுறை வணங்கியேத்தும் முதல்வனே நமச்சிவாய. 1

ஆதியாய் வேதநான்காய் அடிமுடி தெரியா வண்ணம்
சோதியாய் நிறைவாய் நின்ற துணைவனே நமச்சிவாய. 2

இணையடி தேடிக்காணா ஏழுலகளந்த மாயன்
கணையதா வெயின் மூன்றெய்த கடவுளே நமச்சிவாய. 3

ஈட்டியபொருள் போலுன்றன் இணையடி பணிவார் துன்பம்
வாட்டிய செம்பொன் மேனி வள்ளலே நமச்சிவாய. 4

உமையொரு பாகம் வைத்த உம்பர்கள் தம்பிரானே
அமைதரு மணியே முத்தே அண்ணலே நமச்சிவாய. 5

ஊனுமா யுயிருமாகி உள்ளுமாய்ப் புறமுமாகித்
தாணுவாய்ச் சகத்துக் கெல்லாம் தந்தையே நமச்சிவாய. 6

எழு பிறப்பதனான் மாழ்கும் என்னுயிர்க் கிரங்கிவந்து
பழுதற ஆண்டுகொள்ளும் பரமனே நமச்சிவாய. 7

ஏடவிழ் கோதை மாதர் இளமுலை மயக்கப்பட்டு
நீடுதலொழிக்கவல்ல நிமலனே நமச்சிவாய. 8

ஐயமேற்றுண்டாய் பாதம் அன்பிலேன் றலைமேல் வைத்த
செய்யனே வானோர் போற்றுந் தேவனே நமச்சிவாய. 9

ஒன்பது வாயிற் கூட்டில் ஒடுங்குயிருய்யும் வண்ணம்
பொன்பொதி மலர்த்தாள் காட்டும் புனிதனே நமச்சிவாய. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓமெனு மெழுத்தினுள்ளே ஒளியதாய் விளங்குகின்ற
வாமனே கருணை நல்கும் வள்ளலே நமச்சிவாய. 11

ஔவியம் பேசாவண்ணம் அடிமையைத் தடுத்தாட்கொள்ளும்
திவ்விய மணியே முத்தே தேவனே நமச்சிவாய. 12

அக்கினைப் பூண்டு கொண்டே அரிய வெண்ணீறு பூசுஞ்
சொர்க்கனே செக்கர் மேனித் தூயனே நமச்சிவாய. 13

கம்பமார் களிறுரித்த கச்சியேகம்பா செம்பொன்
அம்பலத் தாடுகின்ற அண்ணலே நமச்சிவாய. 14

நுகரம்போல் வளைந்துழன்று நாயினேனுணவு தேடும்
பகரொணா இன்னல் தீர்க்கும் பரமனே நமச்சிவாய. 15

சக்தியுஞ் சிவமுமாகித் தாணுவாய்ச் சகத்துக்கெல்லா
முக்தியே யளிப்பாயாதி முதல்வனே நமச்சிவாய. 16

ஞமனுடனிந்திரற்கும் நாரணற் காரணற்குஞ்
சமனுற முதலாய் நின்ற தாணுவே நமச்சிவாய. 17

இடவிய கபாலமேந்தி ஏழிரண்டுலக மெல்லாந்
துடவியுங்காண வொண்ணாச் சங்கரா நமச்சிவாய. 18

இணங்கிய கமலப் பொற்றாள் இருவருமேத்தி நின்று
தணங்கவம் பலத்துளாடும் வானவா நமச்சிவாய. 19

தண்டமிழ் முனைவன்றன்னைச் சமமுறத் தென்பாலேயும்
ஆண்டரோ டயன்மால் காணா ஆதியே நமச்சிவாய. 20

நஞ்சணி கண்டத்தானே நதிமதிச் சடையினானே
கொஞ்சு பச்சிளம் பெண்பாகங் கொண்டவா நமச்சிவாய. 21

பண்டுல களந்த மாலும் பங்கயத் தயனுந்தேடிக்
கொண்டு சென்றறிய வொண்ணாக் குரவனே நமச்சிவாய. 22

மங்கையோர் பாகம்வைத்து வளர்பிறை முடிமேல் வைத்துச்
செங்கையின் மழுமான்வைத்த தேவனே நமச்சிவாய. 23

இயக்கரு முனிவர்தாமும் இருகரங்குவித்து நின்று
வியக்கவம் பலத்திலாடும் விமலனே நமச்சிவாய. 24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரகர சிவனேயென்றும் அம்பலத்தாடியென்றும்
பரவுவார் துயரந்தீர்க்கும் பரமனே நமச்சிவாய. 25

இலவிதழ் மடவார் தங்கள் ஏவலுக்குரியனாகி
அலமருமென்னையாண்ட அமலனே நமச்சிவாய. 26

வளமுறு மங்கை தன்னை மற்றிடப் பாகம் வைத்தே
ஒளிமதிக் கீற்றைச் சூடும் ஒருவனே நமச்சிவாய. 27

அழகிய முருகனுக்கோ ராறுமுக முங்கூர்மை
பழகிய வேலுமீந்த பரமனே நமச்சிவாய. 28

இளமையுமூப்பு மில்லா இறைவனே யெம்பிரானே
வளமையாங் கருணைமோன வள்ளலே நமச்சிவாய. 29

அறவனே பாதந்தேடி அன்றிரு வோருங் காணா
இறைவனே யென்னைக் காக்கும் ஈசனே நமச்சிவாய. 30

அனந்தலின்றாள் போற்றி அருச்சிக்கு மடியார் தங்கள்
இனந்தனி வென்னை வைப்பாய் ஈசனே நமச்சிவாய. 31

கரியுரிதனைப் போர்த்துக் கபாலமும் கையிலேந்தித்
திரபுர தகனஞ் செய்த தேவனே நமச்சிவாய. 32

காலனை யுதைத்த காலா காமனை யெரித்த கண்ணா
பாலனைக் கறியதாக்கும் பரமனே நமச்சிவாய. 33

கிளிமொழி யமுதச் செவ்வாய்க் கௌரியைப் பாகம் வைத்த
ஒளிமதிச் சடையினானே யொருவனே நமச்சிவாய. 34

கீண்டு வெற் பெடுத்த விரக் கேடிலா வரக்கன் றன்னை
மாண்டுக விரலா லூன்றும் வள்ளலே நமச்சிவாய. 35

குழைகுழி முடருங்கண்ணால் கோதையைப் பிரிந்தபோது
பிழைசெயு மதனைக் காய்ந்த பிஞ்ஞகா நமச்சிவாய. 36

கூவிள மறுகு தும்பை கொன்றைவேள் ளெருக்கூமத்தை
மேவிய சடையினானே வித்தகா நமச்சிவாய. 37

கங்கையைச் சடைமேல் வைத்துக் கௌரியைப் பாகம் வைத்தல்
அங்கணா நீதியோ சொல் ஐயனே நமச்சிவாய. 38


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேசவன் வணங்கிக் கண்ணாங் கேழ்கிளர் கஞ்சஞ்சூட்ட
ஆசியோ டாழியீந்த அமலனே நமச்சிவாய. 39

கைச்சிலை மேருவாகக் கரியமால் பகழியாக
உச்சிதப் புவித்தேரேறும் ஒருவனே நமச்சிவாய. 40

கொற்றவன் தனக்கு முன்னே குதிரையிலேறிக் காட்டிப்
பொற்றுகில் கோலாற்கொள்ளும் பூரணா நமச்சிவாய. 41

கோணமா மலையில் வாழுங் கோகிலா வாதியே நீ
ஆணல்லை பெண்ணுமல்லை அத்தனே நமச்சிவாய. 42

சந்திரன் விளங்குஞ் சென்னித் தலைவனே தம்பிரானே
இந்திர னிமையோர் போற்றும் இறைவனே நமச்சிவாய. 43

சாந்தணி முலையாள்தன்னைத் தண்புனலெனப் பேர்மாற்றி
ஏந்துசெஞ்சடை யெம்மானே இறைவனே நமச்சிவாய. 44

சிரமது கையிலேந்திச் சீரிய முனிவர் தங்கள்
விரகினை யழித்த மேரு வில்லியே நமச்சிவாய. 45

சீதள கமலவாவித் திருநாவலூரன் றன்னைச்
சாதனங் காட்டி யாண்ட தாணுவே நமச்சிவாய. 46

சுத்த வெண்ணீறு பூசிச் சுடலை யினடன மாடும்
அத்தனே ஆரூர் வாழும் அண்ணலே நமச்சிவாய. 47

சூரியன் துயரந் தீர்த்தாய் தோன்றி முப்புரத்தைச் சுட்டாய்
ஆரிய வெள்ளி வெற்பின் அத்தனை நமச்சிவாய. 48

செஞ்சிலை கையிலேந்திச் சிரித்து முப்புரமெரித்தாய்
தஞ்சமென் றுனையடைந்தேன் தாணுவே நமச்சிவாய. 49

சேதன வடியாரோடு திருப்பெருந் துறையில் வந்து
வாதவூரரசை யாண்ட வரதனே நமச்சிவாய. 50

சைவனே யைம்புலன்கள் தமைமனஞ் சாராவண்ணங்
கைவர மருளவேண்டும் கடவுளே நமச்சிவாய. 51

சொரிமலர்க் கொன்றை தும்பை சொல்லிய அறுகுதாளி
விரிமலர்ச் சடையாய் வெள்ளி வெற்பனே நமச்சிவாய. 52


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோலைசூழ் ஆலவாயிற் சோதியே சமணை மாய்க்கப்
பாலறா வாயர்க்காகப் பரிந்தருள் நமச்சிவாய. 53

தந்தையுந் தாயுமில்லாத் தாணுவா யாண் பெண்ணல்லாய்
இந்திரன் அயன்மால் போற்றும் இறைவனே நமச்சிவாய. 54

தாதவிழ் கொன்றை தும்பை சங்கொடு தலையுங் கொண்ட
நாதனே வேதமோது நம்பனே நமச்சிவாய. 55

திரிபுர மெரித்த மூர்த்தி தென்னவன் முன்னே முன்னாள்
நரிதனைப் பரியதாக்கு நம்பனே நமச்சிவாய. 56

தீதிலா வாதவூரர் செய்கைகண் டுளமகிழ்ந்த
நாதனே பரனேவானோர் நண்பனே நமச்சிவாய. 57

துணைவனே யன்பர் தங்கள் துன்பறுத் தருளுமூர்த்தி
பணைமுலை யுமையாள்பங்கா பரமனே நமச்சிவாய. 58

தூதுசுந் தரற்காச் சென்ற சோலைசூ ழாரூரையா
ஆதியே யரனேவெள்ளி யசலனே நமச்சிவாய. 59

தென்னவனாகக் கூடல் சேர்ந்து செங்கோல் செலுத்தி
அந்நகர் தன்னையாண்ட அமலனே நமச்சிவாய. 60

தேடியு மிருவர்காணாத் திருவடி மனத்துள் யாரும்
நாடியே வணங்கநின்ற நம்பனே நமச்சிவாய. 61

தையலோர் பாகம் வைத்துச் சடையிலே கங்கை வைத்த
ஐயனே யாரூர் வாழும் அண்ணலே நமச்சிவாய. 62

தொல்லுல கெல்லாம் போற்றுஞ் சோதியே சூலபாணி
வில்லென மேருவாங்கும் வித்தகா நமச்சிவாய. 63

தோத்திரஞ் செயு மாயற்குச் சுடரொளி யாழியீந்த
அத்தனே யடியரன்பிற் களியனே நமச்சிவாய. 64

நஞ்சினை யருந்தி மாயன் நான்முகன் முதலோர் நாண
அஞ்செழுத் துருவமான அத்தனே நமச்சிவாய. 65

நாரண னலரோனிந்த்ரன் நாடிமுன் வணங்கிநின்ற
ஆரண மோதுகின்ற ஆதியே நமச்சிவாய. 66


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்பவர் நெறியை நோக்கி நெஞ்சை விட்டகலாதானே
கற்பனை கடந்தசோதிக் கடவுளே நமச்சிவாய. 67

நீறணி மேனியனே நிமலனே யமரர்கோவே
ஆறணி சடையினானே அண்ணலே நமச்சிவாய. 68

நுண்ணிடை மாதுபாகா நோக்குவார் தம்மை நோக்குங்
கண்ணுதற் பரனேதேவா கடவுளே நமச்சிவாய. 69

நூபுர பத மாதோடு நுவலருஞ் சபையிலாடும்
மாபுரத் தவர்கள்காலா வானவா நமச்சிவாய. 70

நெஞ்சக மலரிலுன்னை நினைவற நினைந்த பேருக்
கஞ்சலென் றருளிச் செய்யும் அண்ணலே நமச்சிவாய. 71

நேத்திரந் தன்னால் வேளை நெருப்பெழச் சுட்டுவிட்டாய்
சாத்திர முனிவர்போற்றுந் தாணுவே நமச்சிவாய. 72

நைந்துனை நினைப்பார்பாவம் நாசம தாக்கி நிற்பாய்
பைந்தொடி பாகங்கொண்ட பரமனே நமச்சிவாய. 73

நொந்தவ ரிளைத்தோர் தம்மை நொடியள வினில் வாழ்விக்கும்
கந்தரங் கறுத்தமூர்த்தி கடவுளே நமச்சிவாய. 74

நோக்கமூன் றுடையாயென்னை நோக்கியே துரியாதீதத்
தூக்கத்தில் வைப்பதன்றோ சொல்லுவை நமச்சிவாய. 75

நவ்வியை யேந்துங்கையாய் நயமுடனடியார் தங்கள்
வெவ்வினை யெல்லாந் தீர்க்கும் விமலனே நமச்சிவாய. 76

பத்தராய் பணிவார் தம்மைப் பதங்கொடுத் தாளுமையா
சுத்தனே வேதஞ் சொன்ன துணைவனே நமச்சிவாய. 77

பாடுவார் மூர் தம்மைப் பதங்கொடுத் தாண்ட மூர்த்தி
தேடுவார் தேடுகின்ற செம்பொனே நமச்சிவாய. 78

பிறையணி சடையினானே பிஞ்ஞகா வடியார்க் கெல்லாங்
குறைவற வாழ்வளிக்குங் கொற்றவா நமச்சிவாய. 79

பீடுறப் பூசிப்பார்தம் பெருவினை யறுக்கு மூர்த்தி
ஆடல் சேரெருதி லேறும் அண்ணலே நமச்சிவாய. 80


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகலூறுங் பல்லாலன்பு பூண்டெறி சாக்கியர்க்குத்
தகவுற முத்திநல்குந் தாணுவே நமச்சிவாய. 81

பூசு வெண்ணீறு பொங்கப் பொருவிலா வம்மைகாண
நேசமோ டாலங்காட்டில் நிருத்தஞ் செய் நமச்சிவாய. 82

பெண்ணமு தனையார் நாணும் பெட்புறு வளையுந் தூசும்
எண்ணுறு பலியாக் கொண்ட இறைவனே நமச்சிவாய. 83

பேயுடன் காட்டிலாடும் பிஞ்ஞகா பெரியோர் தங்கள்
தூய நன்மனத்துளானே சுத்தனே நமச்சிவாய. 84

பையர வணையிற்றங்கும் பாரளந் தோர்க்குப் பாதி
மெய்யளித் தருள்கூர்ந்திட்ட விண்ணவா நமச்சிவாய. 85

பொசியுறு தேம்புஞ் சோலைப் புகலியிற் பிள்ளையார்க்குச்
சசியொளி முத்தின் பந்தல் தந்தவா நமச்சிவாய. 86

போதக மாகிவந்த புன்மைசே ரசுரன் றன்னை
நோதக வுரித்துப் போர்த்த நுண்ணியா நமச்சிவாய. 87

பௌவத்திற் சிலையோடாழும் படியமண் செய்யவப்பர்க்
கெவ்வம் தகற்றியபேற் றீந்தவா நமச்சிவாய. 88

மறுவறு மாதிசைவ மரபிற் சுந்தரற்குத் தூதாய்ச்
செறிநிசி பரவை வாயிற் சென்றவா நமச்சிவாய. 89

மான் மழுக் கையிலேந்தி வன்னியோர் பாகம் வைத்தே
ஆன்முது கேறுஞ்சோதி ஐயனே நமச்சிவாய. 90

மிடற்றினிற் காளகூட விடத்தினைக் கறுக்க வைத்தாய்
நதித்தலை யிருப்ப வைத்தாய் நம்பனே நமச்சிவாய. 91

மீனென வந்த மாயன் விழியினையிடந்து சாத்தி
ஆனதோர் மேனி நல்கும் அண்ணலே நமச்சிவாய. 92

முன்னமே பிரமன்றன்னை முனிந்ததோர் தலையறுத்தாய்
என்னை வந்தாண்டு கொள்வாய் ஈசனே நமச்சிவாய. 93

மூர்க்கனாந் தக்கன் வேள்வி முன்பு சென்றழித்து வெற்றி
மார்க்கங் கண்டிட்ட சோதி வானவா நமச்சிவாய. 94


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெலிவிலாத் தவத்தோர் கோப மேலுற முன்னாள் விட்ட
புலிதனை யுரித்துச் சாத்தும் புண்ணியா நமச்சிவாய. 95

மேயபேருணவிற் கெட்டா வெளியாகி யணுவுமாகி
ஆயசிற் சொரூபமான அண்ணலே நமச்சிவாய. 96

மையுறு குழலாள் கூடன் மங்கையர்க் கரசியார்முன்
செய்யு நற்பணிக்கு வந்த தேவனே நமச்சிவாய. 97

மொழிதரு நால்வர் தங்கள் முதுமறைத் தமிழ்ப் பாமாலை
ஒழிவின்றிச் சூடிக்கொள்ளும் ஒருவனே நமச்சிவாய. 98

மோகினி வடிவங் கொண்ட முகில்வண்ணன் தன்னைச் சேர்ந்து
சோமிலையனாரைத் தோற்றியோய் நமச்சிவாய. 99

மௌவலங் குழலார்மோக வலையறுத்துயர் சித்தாந்தச்
செவ்வையா முத்தியென்று சித்திக்கும் நமச்சிவாய. 100

நமச்சிவாய மாலை முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சிவலிங்காஷ்டகம்

பிர்ம்ம முராரியர் போற்றிடு லிங்கம்
நிர்மல நல்லொளி தோற்றிடு லிங்கம்
கர்மதுக் கவினை நீக்கிடு லிங்கம்
காட்சிய தாமிச் சதாசிவ லிங்கம்

தேவர் முனிவரர் போற்றிட லிங்கம்
காமத கண்கரு ணாகர லிங்கம்
ராவண கர்ப்ப மறுத்திடு லிங்கம்
காட்சிய தாமிச் சதாசிவ லிங்கம்

மொத்த சுகத்தையும் தந்திடு லிங்கம்
புத்தி மிகுத்தருள் காராண லிங்கம்
சித்த சுரரசு ராதிபர் கொள்ளும்
காட்சிய தாமிச் சதாசிவ லிங்கம்

கனக மகாமணி பூசைகொள் லிங்கம்
பணியரா சூழுறு அணிகள் கொள் லிங்கம்
தக்கனின் யாகம் தழித்திடும் லிங்கம்
காட்சிய தாமிச் சதாசிவ லிங்கம்

குங்கும சந்தக் குழைவுகொள் லிங்கம்
மங்களத் தாமரை மாலை கொள் லிங்கம்
வஞ்சனை பாபம் அகற்றிடும் லிங்கம்
காட்சிய தாமிச் சதாசிவ லிங்கம்

தேவ கணங்களும் பேற்றிடு லிங்கம்
தேய்வறு பக்தி ஈவது லிங்கம்
ஆதவர் ஆயிரர் அவிரொளி லிங்கம்
காட்சிய தாமிச் சதாசிவ லிங்கம்

எட்டொடு பத்தெனும் தத்துவ லிங்கம்
எனைத்துமாமம் தோற்றமுட் காரண லிங்கம்
எட்டெனும் வறுமைகள் நீங்கிடு லிங்கம்
காட்சிய தாமிச் சதாசிவ லிங்கம்

வியாழனும் தேவரும் போற்றிடு லிங்கம்
வில்வமதை மலர் எனக்கொள்ளும் லிங்கம்
பராத்பர மகிபர மாமிந்த லிங்கம்
காட்சிய தாமிச் சதாசிவ லிங்கம்

இது ஸ்ரீ ருத்ரீயத்தில் உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்பிகை துதி

அருவமாய் நின்றதேவி ஆதிசக்தியானாய் தேவி
நானிலம் காக்கவென்றே நாவலில் உறைந்தாய்தேவி
நல்லடியார் வினைகளையும் நாயகியே செந்தரியே
அருளோங்கும் ஆவரம்பிட்டியுறை முத்துமாரி அம்பிகையே.

ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்,
ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்,
ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்,
ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்.

ஷௌந்தரவதனி ஸௌகுண மனோஹரி
மந்தஹாஸ முக மதிவதனி
சந்தன குங்கும அலங்காரமுடனே
தந்திடுவா யுந்தன் தரிசனமே. (ஓம்)

நந்தி தேவருடன் முனிவரும் பணிய
ஆனந்த முடனே வந்திடுவாய்
வந்தனை செய்து மாயனயனுடன்
வகையாயுன் புகழ் பாடிடவே (ஓம்)

தங்கச் சிலம்பு சலசலவென்றிட
தாண்டவமாடித் தனயன் மகிழ்ந்திட
பொங்கு மானந்தமுடன் புவிமேல் விளங்கும்
மங்கள நாயகி மகிழ்வாய் வருவாய் (ஓம்)

வேதங்கள் உன்னை வேண்டிப்பாடிட
விரும்பி ஸரஸ்வதி வீணை வாசித்திட
ஸதானந்த மான ஜோதிஸ்வருபி
ராஜ ராஜேஸ்வரி சரணம் சரணம் (ஓம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ முத்துமாரி துதி

உலகத்து நாயகியே! எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி
உன்பாதம் சரண் புகுந்தோம் - எங்கள் முத்து
மாரியம்மா. எங்கள் முத்துமாரி
கலகத் தரகர் பலர் - எங்கள் முத்துமாரி
மாரியம்மா, எங்கள் முத்துமாரி
கருத்தினுள்ளே புகுந்துவிட்டார் - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி
பலகற்றும் பலகேட்டும் - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி
பயனொன்று மில்லையடி - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி
துணி வெளுக்க மண்ணுண்டு -எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி
தோல் வெளுக்க சாம்பலுண்டு - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி
மணி வெளுக்க சாணையுண்டு - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி
பிணிகளுக்கு மாற்றுண்டு - எங்கள் முத்து
மாரியம்மா. எங்கள் முத்தமாரி
பேதமைக்கு மாற்றில்லை - எங்கள முத்து
மாரியம்மா எங்கள் முத்துமாரி
அணிகளுக்கோ ரெல்லையில்லாப்- எங்கள் முத்து
மாரியம்மா. எங்கள் முத்துமாரி
அடைக்கலமிங் குனைப்புகுந்தோம் - எங்கள் முத்து
மாரியம்மா. எங்கள் முத்துமாரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிளக்கு பூசை

திருமணமாகாத பெண்களுக்கு விரைவில் திருமணமாவதற்கும் மாங்கல்யம் நிலைக்கவும் பயன்படும் இந்தப் பூஜை மிகச் சிறப்பு வாய்ந்தது.

இந்தப் பூஜையை வெள்ளிக்கிழமையிலும், செவ்வாய்க்கிழமையிலும் செய்யலாம்.

இந்தப் பூஜைக்கு வேண்டிய பொருட்கள் மல்லிகைப்பூ, கற்கண்டு, பழங்கள், குங்குமம், தேங்காய், கற்பூரம், நெய் முதலியன.

திருவிளக்கு பூஜைக்குத் தேவையான விளக்கு பித்தளை அல்லது வெள்ளியால் செய்யப்பட்டதாக இருக்க வேண்டும்

மேடை அமைத்து அவ்மேடை மீது பூக்களைத் தூவி அதன் மீது தட்டு வைத்து ஐந்து முகத் திருவிளக்கும் இன்னொரு தட்டில் மஞ்சள் பிள்ளையாரும் வைக்க வேண்டும். பிள்ளையாருக்கு அறுகம்புல் மாலை அணிவிக்க வேண்டும் திருவிளக்கு மல்லிகைப்பூ மாலை அர்ச்சனைக்கு மல்லிகை உதிரிப்பூக்களை பயன்படுத்த வேண்டும்.

எக்காரணம் கொண்டும் பூஜைக்குப் பயன்படும் எந்தப் பொருளும் எவர் சில்வரில் செய்ததாக இருக்கக் கூடாது.

முதலில் விநாயகரை கற்பூர தீபம் காட்டி வணங்கி விட்டு திருவிளக்கிற்குக் கற்பூரதீபம் காட்டிவிட்டு திருவிளக்கு ஸ்தோத்திரங்களைப் பாட வேண்டும். இப்பாடல்களை தனியாகவோ எல்லோரும் சேர்ந்தோ பாடலாம்.

## திருவிளக்கு பூசை

ஊன் ஆனாய் உயிர் ஆனாய்
உயிரில் ஊறும் உணர்வானாய்
வான் ஆதி ஐம்பூத
வகை எல்லாம் நீ ஆனாய்

தேன் ஆரும் மலர் கொன்றைச்
சிவம் என்னும் பொருளானாய்
நான் ஆனாய் உயிர்க்கு உயிரே
ஞானப் பேரொளியுமையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கே திருவிளக்கே வேந்தன் உடன்பிறப்பே
ஜோதி மணிவிளக்கே சீதேவி பொன்மணியே
அந்தி விளக்கே அலங்கார நாயகியே
காஞ்சி விளக்கே காமாட்சி தாயாரே
பசும் பொன் விளக்கு வைத்து பஞ்சுத் திரிபோட்டுக்
குளம்போல் எண்ணெய் விட்டுக்
கோலமுடன் ஏற்றி வைத்தேன்
ஏற்றினேன் நெய்விளக்கு எங்கள் குடில் விளங்க
வைத்தேன் திருவிளக்கு மாளிகையும் தான் விளங்க
மாளிகையில் ஜோதியுள்ள மாதாவைக் கண்டு மகிழ்ந்தேன்
மாங்கல்ய பிச்சை மடிப்பிச்சை தாரும் அம்மா
சந்தானப் பிச்சையுடன் தனங்களும் தாரும் அம்மா
பெட்டி நிறையப் பூஷணங்கள் தாரும் அம்மா
பட்டி நிறையப் பால் பசுவைத் தாரும் அம்மா
கொட்டகை நிறையக் குதிரைகளைத் தாரும் அம்மா
புகழுடம்பைத் தாரும் அம்மா பக்கத்தில் நில்லும் அம்மா
அல்லும் பகலும் என்றன் அண்டையிலே நில்லுமம்மா
சேவித் தெழுந்திருந்தேன் தேவிவடிவங் கண்டேன்
வச்சிரக் கிரீடம் கண்டேன் வைடூரிய மேனி கண்டேன்
முத்துக்கொண்டை கண்டேன் முழுப்பச்சை மாலை கண்டேன்

சவுரிமுடி கண்டேன் தாழைமடல் சூடக் கண்டேன்
பின்னலழகு கண்டேன் பிறைபோல நெற்றி கண்டேன்
சாந்துடன் நெற்றி கண்டேன் தாயார் வடிவங் கண்டேன்
கமலத்திருமுகத்தில் கஸ்தூரிப் பொட்டுக் கண்டேன்
மார்பில் பதக்கம் மின்ன மாலையசையக் கண்டேன்
கைவளையல் கலகலென கணையாழி மின்னக் கண்டேன்
தங்க ஒட்டியாணம் தகதகென ஜொலிக்கக் கண்டேன்
காலிற் சிலம்பு கண்டேன் காலாளி பீலீ கண்டேன்
மங்கள நாயகியே மனங்குளிரக் கண்டேன் அடியாள் நான்
அன்னையே அருந்துணையே அங்கிருந்து பாருமம்மா
வந்த வினையகற்றி மகாபாக்யம் தாரும் அம்மா
தாயாரே உன்ரன் தாளடியில் சரணம் என்றேன்
மாதாவே யுன்றன் மலரடியில் நான் பணிந்தேன்.

(இந்த அகவலைப் படித்து முடித்த பிறகு கற்பூர தூபதீபம் காட்டி பதினாறு முறை வணங்க வேண்டும். வணங்கிய பிறகு)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வ மங்கள மாங்கல்யே சிவே!
சர்வார்த்த சாதகே
சரண்யே திரியம்பிகே தேவி
நாராயணி நமோஸ்துதே!

(கற்பூர தூபதீபம் காட்டி வணங்கிவிட்டு கீழ்க்கண்ட அர்ச்சனை ஸ்லோகம் சொல்லி மல்லிகை மலரை திருவிளக்கின் பாதத்தில் போட வேண்டும்)

பொன்னும் மெய்ப் பொருளும் தருவாய் போற்றி
போகமும் திருவும் புணர்ப்பாய் போற்றி
முற்றறி வொளியாய் மிளிர்ந்தாய் போற்றி
மூவுலுகம் நிறைந்திருந்தாய் போற்றி
வரம்பி லின்பமாய் வளர்ந்தாய் போற்றி
வானமாய் அருள்மழை பொழிவாய் போற்றி
இயற்கை அறிவொளி யானாய் போற்றி
ஈரேழு உலகமும் ஈன்றாய் போற்றி
பிறர் வயமாகப் பெரியாய் போற்றி
பேரின்பப் பெருக்காய் பொலிந்தாய் போற்றி
பொருட் கடலாம் பொருளே போற்றி
பெரியோர்க் கெல்லாம் பெரியாய் போற்றி
முடிவிலாற்றல் உடையோய் போற்றி
மூவுலகுந் தொழ மூத்தோய் போற்றி
அளவிலாச் செல்வம் தருவாய் போற்றி
ஆனந்த அறிவொளி விளக்கே போற்றி

ஓம் சிவாய நம
ஓம் சிவசக்தியே நம
ஓம் இச்சா சக்தியே நம
ஓம் கிரியா சக்தியே நம
ஓம் சொர்ண சொரூபியே நம
ஓம் ஜோதி லெட்சுமியே நம
ஓம் தீப லெட்சுமியே நம
ஓம் மகா லெட்சுமியே நம
ஓம் தனலட்சுமியே நம
ஓம் தான்ய லெட்சுமியே நம
ஓம் தைரிய லெட்சுமியே நம


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் வீர லெட்சுமியே நம
ஓம் விஜய லெட்சுமியே நம
ஓம் வித்யா லெட்சுமியே நம
ஓம் ஜெய லெட்சுமியே நம
ஓம் வர லெட்சுமியே நம
ஓம் கெஜ லெட்சுமியே நம
ஓம் காம வல்லியே நம
ஓம் காமாட்சி சுந்தரியே நம
ஓம் சுப லெட்சுமியே நம
ஓம் ராஜ லெட்சுமியே நம
ஓம் கிரக லெட்சுமியே நம
ஓம் சித்த லெட்சுமியே நம
ஓம் சீதா லெட்சுமியே நம
ஓம் திரிபுர லெட்சுமியே நம
ஓம் சர்வ மங்கள காரணியே நம
ஓம் சர்வ விக்ன நிவாரணியே நம
ஓம் சர்வாங்க சுந்தரியே நம
ஓம் சௌபாக்ய லெட்சுமியே நம
ஓம் நவக்கிரக தாயினியே நம
ஓம் அண்டர் நாயகியே நம
ஓம் அலங்கார நாயகியே நம
ஓம் ஆனந்த சொரூபியே நம
ஓம் அகிலாண்ட நாயகியே நம
ஓம் பிருமாண்ட நாயகியே நம
ஓம் எனும் சிற்பரத்தாளே நம

அபாயமறுக்கும் அறுகோணத்தி
சொற்பவணத்தி சூக்ஷ்ம ரூபி
சரணம் சரணம் தாள்பணிந்தேனுனை
பாவம் பொறுத்து மாங்கல்ய பாக்கியம் தந்து
விக்கினங்கள் வராமல் வேலிபோலக் காத்து
ஆதரித்தெனக்கு அருள்புரிவாயே
புவன சுந்தரி போற்றி வணக்கம்
குருவடிவாய் வந்து உபதேசங்கள்
கொடுத்துன் திருவடி தந்தருள்வாயே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவி துணை
ஓம் சக்தி

# கௌரி காப்பு

## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வாராமற்கா.

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியாரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனுக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீரிவிரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாந்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்திவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரு குர்ப்புரளம் தேவியரேளள
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்நேற விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பீள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூதணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குக் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்குத் வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பாராசக்தி தாயவளேஎ
எட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்குத் வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசிலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ச்து அணிவோர்குத் தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்குத் நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சநடதனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப்பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கொளரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

திருச்சிற்றம்பலம்

# அபிராமிப் பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவா ராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணியி லாத உடலும்
சலியாத மனமும்அன் பகலாத மனைவியும்
தவறாத சந்தா னமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும்உ தவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்க்காதேவி சரணம்

ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி
துர்க்காதேவி சரணம்
ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி
துர்க்காதேவி சரணம்

துர்க்கை அம்மனைத் துதித்தால்
என்றும் துன்பம் பறந்தோடும்
தர்மம் காக்கும் தாயும் அவளே
தரிசனம் கண்டால் போதும்
கர்மவினைகளும் ஓடும்
சர்வ மங்களம் கூடும்
பொற்கரங்கள் பதினெட்டும்
நம்மை சுற்றிவரும் பகை விரட்டும்
நெற்றியிலே குங்குமப்பொட்டு
வெற்றிப் பாதையைக் காட்டும்
ஆயிரம் கண்கள் உடையவளே
ஆதிசக்தி அவள் பெரியவளே
ஆயிரம் நாமங்கள் கொண்டவளே
தாய்போல் நம்மைக் காப்பவளே
சங்கு சக்கரம் வில்லும் அம்பும்
மின்னும் வாளும் வேலுடன் சூலமும்
தங்கக் கைகளில் தாங்கி நிற்பவள் - அம்மா
தங்கக் கைகளில் தாங்கி நிற்பவள்
சிங்கத்தின் மேல் அவள் வீற்றிருப்பாள்
திங்களை முடிமேல் சூடிநின்றாள்
மங்கள வாழ்வும் தந்திடுவாள்
மங்கையற்கரசியும் அவளே
அங்கயற் கண்ணியும் அவளே

ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி
துர்க்காதேவி சரணம்
ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி
துர்க்காதேவி சரணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ மஹிஷாஸுரமர்த்தினீ ஸ்தோத்திரம்

அயிகிரி நந்தினி நந்தித மேதினி விச்வ விநோதினி நந்தநுதே
கிரிவர விந்த்ய சிரோதி நிவாஸினி விஷ்ணு விலாஸினி ஜிஷ்ணுநுதே
பகவதி ஹே சிதிகண்ட குடும்பினி பூரிகுடும்பினி பூரிக்ருதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

ஸுரவர வர்ஷிணி துர்தர தர்ஷிணி துர்முக மர்ஷிணி ஹர்ஷரதே
த்ரிபுவன போஷிணி சங்கர தோஷிணி கில்பிஷ மோஷிணி கோஷரதே
தனுஜ நிரோஷிணி திதிசுத ரோஷிணி துர்மத சோஷிணி சிந்துஸுதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி ஷைலஸுதே

அயி ஜகதம்ப மதம்ப கதம்ப வனப்ரிய வாஸினி ஹாஸரதே
சிகரி சிரோமணி துங்க ஹிமாலய ஸ்ருங்க நிஜாலய மத்யகதே
மதுமதுரே மதுகைடப கஞ்ஜினி கைடப பஞ்ஜினி ராஸரதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

அயி சதகண்ட விகண்டித ருண்ட விதுண்டித சுண்ட கஜாதிபதே
ரிபுகஜ கண்ட விதாரண சண்ட பராக்ரம சுண்ட ம்ருகாதிபதே
நிஜபுஜ தண்ட நிபாதித கண்ட விபாதித முண்ட பதாதிபதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

அயிரண துர்மத சத்ரு வதோதித துர்தர நிர்ஜர சக்தி ப்ருதே
சதுர விசார துரீண மஹாசிவ தூதக்ருத ப்ரமதாதிபதே
துரித துரீஹ துராசய துர்மதி தானவ தூத க்ருதாந்தமதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயி சரணாகத வைரிவ தூவர வீர வராபய தாயகரே
த்ரிபுவன மஸ்தக சூலவிரோதி சிரோதி க்ருதாமல சூலகரே
துமிதுமி தாமர துந்துபி நாத மஹோ முகரீக்ருத திங்மகரே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

அயி நிஜஹுங்க்ருதி மாத்ர நிராக்ருத தூம்ர விலோசன தூம்ரசதே
ஸமரவிசோஷித சோணிதபீஜ ஸமுத்பவ சோணித பீஜலதே
சிவசிவ சும்ப நிசும்ப மஹாஹவ தர்ப்பித பூத பிசாசரதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

தனுரனு ஸங்க ரணக்ஷண ஸங்க பரிஸ்ஃபுர தங்க நடத்கடகே
கனக பிசங்க ப்ரிஷத்க நிஷங்க ரஸத்பட ச்ருங்க ஹதாபடுகே
க்ருத சதுரங்க பலக்ஷிதிரங்க கடத்பஹுரங்க ரடத்படுகே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

ஜய ஜய ஜப்ய ஜயே ஜய சப்த பரஸ்துதி தத்பர விச்வனுதே
பன பன பிஞ்ஜிமி பிங்க்ருத நூபுர ஸிஞ்ஜித மோஹித பூதபதே
நடித நடார்த்த நடீ நட நாயக நாடித நாட்ய ஸுகான ரதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

அயி ஸுமன: ஸுமன: ஸுமன: ஸுமன: ஸுமனோஹர காந்தியுதே
ச்ரித ரஜனீ ரஜனீ ரஜனீ ரஜனீ ரஜனீகர வக்த்ர வ்ருதே
ஸுநயன விப்ரமர ப்ரமர ப்ரமர ப்ரமர ப்ரமரா திபதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸஹித மஹாஹவ மல்ல மதல்லிக மல்லி தரல்லக மல்லரதே
விரசித வல்லிக பல்லி கமல்லிக ஜில்லிக பில்லிக வர்கவ்ருதே
ஸிதக்ருத புல்லிஸ முல்லஸி தாருண தல்லஜ பல்லவ ஸல்லலிதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

அவிரலகண்ட கலன்மத மேதுர மத்த மதங்கஜ ராஜபதே
த்ரிபுவன பூஷண பூதகலாநிதி ரூப பயோநிதி ராஜஸுதே
அயிஸுத தீஜன லாலஸ மானஸ மோஹன மன்மத ராஜஸுதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

கமல தலாமல கோமல காந்தி கலா கலிதாமல பாலலதே
ஸகல விலாஸ கலாநிலய க்ரம கேலிசலத்கல ஹம்சகுலே
அலிகுல சங்குல குவலய மண்டல மௌலிமிலத் பகுலாலிகுலே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

கர முரலீரவ வீஜித கூஜித லஜ்ஜித கோகில மஞ்ஜுமதே
மிலித புலிண்ட மனோஹர குஞ்ஜித ரஞ்சித சைல நிகுஞ்ஜகதே
நிஜகுணபூத மஹா சபரீகண ஸத்குண ஸம்ப்ருத கேலிதலே
ஜய ஜய ஹே மஹிஷாசுர மர்தினி ரம்யக பர்தினி சைலஸுதே

கடிதடபீத துகூல விசித்ர மயூக திரஸ்க்ருத சந்த்ரருசே
ப்ரணத ஸுராஸுர மௌலி மணிஸ்ஃபுர தன்சுல ஸன்னக சந்த்ரருசே
ஜிதகனகாசல மௌலி பதோர்ஜித நிர்பர குஞ்ஜர கும்பகுசே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜித ஸஹஸ்ர கரைக ஸஹஸ்ர கரைக ஸஹஸ்ர கரைகநுதே
க்ருத ஸுர தாரக ஸங்கர தாரக ஸங்கர தாரக ஸூனுஸுதே
ஸுரத சமாதி ஸமான ஸமாதி ஸமாதி ஸமாதி ஸுஜாதரதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

பதகமலம் கருணா நிலயே வரிவஸ்யதியோ ஸ்னுதினம் ஸுசிவே
அயி கமலே கமலா நிலயே கமலா நிலய ஸகதம் நபவேத்
தவ பதமேவ பரம்பதமித் யனு சீலயதோ மமகிம் ந சிவே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

கனகல ஸத்கல ஸிந்துஜலைரனு ஸிஞ்சிநுதே குண ரங்கபுவம்
பஜதி ஸகிம் நசசீ குசகும்ப தடீ பரிரம்ப ஸுகானுபவம்
தவ சரணம் சரணம் கரவாணி நதாமரவாணி நிவாஸிசிவம்
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

தவ விமலேந்து குலம் வதனேந்துமலம் ஸகலம் நனு கூலயதே
கிமு புரஹூத புரீந்துமுகீ ஸுமுகீபிரஸௌ விமுகீ க்ரியதே
மமது மதம் சிவநாமதனே பவதீ க்ருபயா கிமுத க்ரியதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

அயி மயி தீனதயாலு தயா க்ருபயைவ த்வயா பவித்வயமுமே
அயி ஜகதோ ஜனனீ க்ருபயாஸி யதாஸி ததாஸனு மிதாஸிரதே
யதுசித மத்ர பவத்யுரரீ குருதா துருதா பமபாகுருதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காளி ஸ்தோத்திரம்

யாது மாகி நின்றாய் - காளி
எங்கும் நீ நிறைந்தாய்
தீது நன்மை எல்லாம் நின்றன்
செயல்கள் அன்றி இல்லை,
போதுமிங்கு மாந்தர் வாழும்
பொய்மை வாழ்க்கை யெல்லாம்
ஆதிசக்தி தாயே என்மீது
அருள் புரிந்து காப்பாய்

எந்த நாளும் நின்மேல் - தாயே
இசைகள் பாடி வாழ்வேன்
கந்தனைப் பயந்தாய் தாயே
கருணை வெள்ள மானாய்
மந்த மாருதத்தில் - வானில்
மலையின் உச்சி மீதில்
சிந்தை எங்கு செல்லும் - அங்கு
செய்மை தோன்றும் அன்றே!

காளிமீது நெஞ்சம் - என்றும்
கலந்து நற்க வேண்டும்
வேளை யொத்த விறலும் பாரில்
வேந்த ரேத்து புகழும்
யாழியொத்த வலியும் என்றும்
இன்பம் நிற்கும் மனமும்
வாழி யீதல் வேண்டும் - அன்னாய்
வாழ்க நின்றன் அருளே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருணை உள்ளம் கொண்டவளே

கருணை உள்ளம் கொண்டவளே
கருமாரியம்மா - அம்மா
கருணை உள்ளம் கொண்டவளே
கருமாரியம்மா உன்
கடைக்கண்ணால் நலம் கொடுப்பாய் அருள்மாரியம்மா
அருள்மாரியம்மா - அம்மா
கரகம் எடுத்து ஆடி வந்தோம்
காணிக்கை செலுத்த நாடி வந்தோம் (2)
கரங்கள் குவித்து பாடி வந்தோம் (2)
வரங்கள் குறித்து தேடி வந்தோம்.. அம்மா (கருணை)
குத்து விளக்கை ஏற்றி நின்றோம்
எங்கள் குல விளக்கை போற்றி நின்றோம் (2)
முத்துமாரி உனைப் பணிந்தோம்
பக்தி கொண்டோம் பலனடைந்தோம்
அன்ன வாகனம் அமர்ந்து வந்தாய் (2) அம்மா(கருணை)
அம்மா எங்களுக்கு கருணை தந்தாய்(2)
புன்னகை முகம் கொண்டவளே
பொன் பாதம் தந்தவளே.. அம்மா (கருணை)

### அபிராமி அந்தாதி

ஆத்தாளை, எங்களை அபிராம
வல்லியை, அண்ட மெல்லாம்
பூத்தாளை, மாதுளம் பூநிறத்
தாளை, புவி அடங்கக்
காத்தாளை, அங்குச பாசாங்
குசமும் கருப்பும் அங்கை
சேர்த்தாளை முக் கண்ணியைத்
தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி
# ஸ்ரீதேவி கருமாரி அம்மன்
# ஸ்தோத்திரம்

கற்பூர நாயகியே கனக வல்லி
காளி மகமாயி கருமாரி அம்மா
பொற்கோவில் கொண்ட சிவகாமி அம்மா
பூவிருந்த வல்லி தெய்வயானை அம்மா
விற்கோல வேதவல்லி விசாலாட்சி
விழிக்கோல மாமதுரை மீனாட்சி
சொற்கோவில் நான் அமைத்தேன் இங்கு தாயே
சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே -கற்பூர

புவனம் முழுதும் ஆளுகின்ற புவனேஸ்வரி
புரம் எரித்தோன் புறம்இருக்கும் பரமேஸ்வரி
நவ நவமாய் வடிவாகும் மகேஸ்வரி
நம்பினவர் கைவிளக்கே ஸர்வேஸ்வரி
கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி
கார்இருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி
உவமானப் பரம்பொருளே ஜகதீஸ்வரி
உன்னடிமை சிறியோனை நீ ஆதரி -கற்பூர

உன்னிடத்தில் சொல்லாமல் வேறு எந்த
உறவிடத்தில் முறையிடுவேன் தாயே எந்தன்
அன்னையவள் நீஇருக்க உலகில் மற்ற
அன்னியரைக் கெஞ்சிடுதல் முறையோ அம்மா
கண்ணீரைத் துடைத்துவிட ஓடிவா அம்மா
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா
சின்னவனின் குரல்கேட்டு உன்முகம் திருப்பு
சிரித்தபடி என்னைத் தினம்வழி அனுப்பு -கற்பூர

கண்இரண்டும் உன்உருவே காணவேண்டும்
கால்இரண்டும் உன் அடியே நாடவேண்டும்
பண்அமைக்கும் நா உனையே பாடவேண்டும்
பக்தியோடு கைஉனையே கூடவேண்டும்
எண்ணம் எல்லாம் உன்நினைவே ஆகவேண்டும்
இருப்பதெல்லாம் உன்னுடையது ஆகவேண்டும்
மண் அளக்கும் சமயபுர மாரியம்மா
மகனுடைய குறைகளையும் தீரும் அம்மா -கற்பூர


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்றியினுள் குங்குமமே நிறைய வேண்டும்
நெஞ்சினிலும் திருநாமம் வழிய வேண்டும்
கற்றதெல்லாம் மேன்மேலும் பெருக வேண்டும்
கவிதையிலே உன்நாமம் வாழ வேண்டும்
சுற்றம் எல்லாம் நீடூழி வாழவேண்டும்
ஜோதியிலே நீஇருந்து ஆள வேண்டும்
மற்றதெல்லாம் நான் உனக்குச் சொல்லலாமா
மடிமீது பிள்ளை என்னைத் தள்ளலாமா? -கற்பூர

அன்னைக்கு உபகாரம் செய்வதுண்டோ?
அருள்செய்ய இந்நேரம் ஆவதுண்டோ?
கண்ணுக்கு இமை இன்றிக் காவல் உண்டோ?
கன்றுக்குப் பசுவின்றிச் சொந்தம் உண்டோ?
முன்னைக்கும் பின்னைக்கும் பார்ப்பதுண்டோ?
முழுமைக்கும் நீ எந்தன் அன்னையன்றோ?
எண்ணெய்க்கும் விளக்குக்கும் பேதமுண்டோ?
என்றைக்கும் நான்உன்றன் பிள்ளையன்றோ? -கற்பூர

அன்புக்கே நான் அடிமை ஆக வேண்டும்
அறிவுக்கே என்காது கேட்க வேண்டும்
வம்புக்கே போகாமல் இருக்க வேண்டும்
வஞ்சத்தை என்நெஞ்சம் அறுக்க வேண்டும்
பண்புக்கே உயிர்வாழ ஆசை வேண்டும்
பரிவுக்கே நான் என்றும் பணிய வேண்டும்
என்பக்கம் இவைஎல்லாம் இருக்க வேண்டும்
என்னோடு நீ என்றும் வாழ வேண்டும் -கற்பூர

கும்பிடவோ கை இரண்டும் போதவில்லை
கூப்பிடவோ நா ஒன்றால் முடியவில்லை
நம்பிடவோ மெய்அதனில் சக்தி இல்லை
நடந்திடவோ கால் இரண்டில் ஆகவில்லை
செம்பவள வாய் அழகி உன் எழிலோ
சின்ன இரு கண்களுக்குள் அடங்கவில்லை
அம்பளவு விழியாளே உன்னை என்றும்
அடிபணியும் ஆசைக்கோர் அளவு இல்லை -கற்பூர

காற்றாகிக் கனலாகிக் கடலாகினாய்!
கருவாகி உயிராகி உடலாகினாய்
நேற்றாகி இன்றாகி நாளாகினாய்
நிலமாகி பயிராகி உணவாகினாய்
தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய்
தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்
போற்றாத நாளில்லை தாயே உன்னை
பொருளோடு புகழோடு வைப்பாய் என்னை -கற்பூர


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமரகுருபர சுவாமிகள் இயற்றிய
# சகல வல்லி மாலை

வெண்டா மரைக்கன் றிநின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசக மேழுமளித்
துண்டா னுறங்கவொழித் தான்பித்
தாவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்த்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே

பண்ணும் பரதமுங்கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கைடக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழத் தீம்பா
லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும் வெள்ளோ திமம்பேடே
சகல கலாவல்லியே

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தத் தடிமைமெகாள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப்பேறே
சகல கலாவல்லியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவல்லியே

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாள்என் உள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாராது இடர்

படிக நிறமும் பவளச் செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும் - துடியிடையும்
அல்லும் பகலு மனவரத முந்துதித்தாற்
கல்லும் சொல் லாதோ கவி

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்து வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியா சனத்தி லரசரோ டென்னைச்
சரியா சனம் வைத்த தாய்

பூத்தவளே புவனம் பதிநான்கையும், பூத்தவண்ணம்
காத்தவளே! பின் கரந்தவளே கறைக் கண்டனுக்கு
மூத்தவளே! என்றும் மூலா முகுந்தற்கு இளையவளே!
மாத்தவளே! உன்னை அன்றி மற்ற ஓர் தெய்வம் வந்துதிப்பதே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காயத்ரி மந்த்ரம்

ஓம் பூர் புவ ஸ்வா
தத் ஸவிதூர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ ந: ப்ரசோதயாத்

## அஷ்ட லெட்சுமி வணக்கம்

எந்தத் தேவியானவள் சகல உயிர்களிலும் சக்தி உருவில் நிற்கிறாளோ அந்தத் தனலெட்சுமியை நான் வணங்குகிறேன்.

எந்தத் தேவியானவள் எல்லா உயிரினங்களிலும் புத்தி உருவில் விளங்குகிறாளோ அந்த வித்யா லெட்சுமியை நான் வணங்குகிறேன்.

எந்தத் தேவியானவள் எல்லா உயிர்களுக்கும் பசியைத் தீர்க்கும் தான்ய உருவில் உள்ளனளோ அந்தத் தான்ய லெட்சுமியை நான் வணங்குகிறேன்.

எந்தத் தேவியானவள் எல்லா உயிரினங்களிலும் தைரிய உருவில் உள்ளனளோ அந்த வீரலெட்சுமியை நான் வணங்குகிறேன்.

எந்தத் தேவியானவள் எல்லா உயிரினங்களிலும் மகிழ்ச்சி உருவில் உள்ளனளோ அந்தச் சௌபாக்ய லெட்சுமியை நான் வணங்குகிறேன்.

எந்தத் தேவியானவள் எல்லா உயிர்களுக்கும் தாயாக விளங்குகிறாளோ அந்தச் சாந்தான லெட்சுமியை நான் வணங்குகிறேன்.

எந்தத் தேவியானவள் எல்லா உயிர்களுக்கும் கருணை உருவில் காட்சி தருகிறாளோ அந்தக் காருண்ய லெட்சுமியை நான் வணங்குகிறேன்.

எந்தத் தேவியானவள் எல்லா உயிரினங்களிலும் மங்கள நாயகியாய் விளங்குகிறாளோ அந்த மகாலெட்சுமியை நான் வணங்குகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அராலியூர் செல்லத்துரை மாணிக்கம் தம்பதிகளின் புதல்வனும்
திருமதி பாலாம்பிகை அவர்களின் துணைவருமாகிய
திரு. அரியநாயகம் அவர்களது

## வாழ்க்கைக் குறிப்பு

ஈழத் தாயின் தலைமுடியாம் யாழ்ப்பாணத்தின்
சூழவுள்ள நிலப்பரப்பும் தீவுகளும் அருகாக
ஆழ்க்கடலும் துறை முகங்களும் மலிந்த
கிழக்கிலமைந்த துறை கொண்ட சிறு நகரம் அராலியூர்.

வாடை வழிசெல்லச் சேரநாடு அருகிருக்கும்
அங்கிருந்து தந்தங்கள் சேர ஊருஞ் செழித்திருக்கும்.
ஊரவர்கள் உள்ளும் ஊன்றியதோர் தொடர்பை
பறைந்திடுவர் பண்புடைய பழைய தமிழ்மொழியால்

அராலித்துறை தான் தீவுகளைத் தானிணைக்கும்
பாலமாயிருந்தது பண்ணை வருமுன்னே
நாவாய்கள் வங்கங்கள் நாற்றிசையும் சென்றடைய நல்லதொரு
துறைமுகமுமாய் மாறிற்று அந்நாளில்

ஆலயங்கள் மலி அராலியூரின் கிழக்கு மேற்கு இரண்டும்
வடக்குத் தெற்கென வளர்ச்சி பெற்றிருந்தது
மாடுமலி வேளாண்மை நெல் வரகு சாமையுடன்
பீடுடைய கொடைவள்ளல் கொண்டநாடு.

அராலியூர் அண்ணல் வேலுப்பிள்ளை எனும் பெருமகனார்
வள்ளியம்மை தனை மணந்து பேர் சொல்ல எட்டுப்
பிள்ளைகளைப் பெற்றுப் பெருமையுற வாழ்ந்த
சீர்பெற்ற குடும்பமது சிறப்புடைய முன்னோர்கள்

எண்மரில் ஒருவராக செல்லத்துரையிருந்தார்
வெளியூரில் சென்று ஓவசியராகத் தொழில்பார்த்தார்
குடும்பம் தழைத் தோங்கிச் செல்வங்கள் சேர்ந்திடத்
தானும் உழைத்துக் தந்தையின் தனயனெனத் தானுமுயர்ந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டிலிப்பாயில் சண்முகத்தார் பார்வதியும்
பெற்ற பெருமகளாம் மாணிக்கம் என்னும்
மங்கைதன்னைக் கைப் பிடித்து இரத்தின
புரி சென்று இரத்தினங்கள் பெற்றெடுத்தார்.

மூத்தவராய் பிறந்தவர் அருமை பெருமையாய்
பெற்றதனால் அரியநாயகம் என்றும்
யோகத்தைத் தந்த மூத்தமகன் என்பதனால்
யோகரத்தினம் என்பவரே மூத்ததொரு இரத்தினமாம்.

சரோஜினி, மங்களேஸ்வரி, ஜீவரெட்ணம், அதிஷ்டரெத்தினம்,
என ஐவராய்ப் பிறந்ததுடன் ஆயகலைகளையும்
கற்று வள்ளி வள நாட்டில் குடியேற்றத்
திட்ட அதிபராய் தொழில் செய்து பெருமையுற்றார்.

இருபத்திநான்கு வயது இளவலாயிருக்கையில்
தந்தை யிறந்ததனால் தானே தலைவனாய்
நால்வரையும் வளர்த்து நல்ல வழிகாட்டி
பெருமையுற வாழ்ந்தார் உதாரணமாய்.

அயலூராம் கரம்பனிலே இராசலிங்கம் நாகம்மா தம்பதியர்
அண்ணலது பெருமையினை ஊரறியத் தான் கேட்டு
தங்கள் மகள் பாலாம்பிகையைப் பாரறிய
மணமுடித்து வைத்து மகிழ்வுடனே வாழவைத்தார்.

பெண் பிள்ளைகள் பெற்றதனால் பெருமையுற்றார்
தேவிகா, வினித்தா என்று பெயரிட்டுப்
படிப்பித்து இவ்வுலகில் செல்வச் செழிப்புடன்
வளங் கொடுத்து வாழ வழிசெய்தார்.

சீரணி நாகம்மாள் திருத்தலத்தைப் பேணியதும்
ஆவரம்பட்டி முத்துமாரியம்மன் திருப்பணியும் அழகான
இரு பெண்கள் அவருக்குக் கிடைத்தார்கள்-முதுமையில்
நிழலென வேயிருந்தார் நித்தமவர் துணைபெற்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரேஸ்வரனையும் விக்கினாவையும் மருமக்களாய் யடைந்து
பெருமையுறு பேரர்களாய் சுமன், கீர்த்தன்
இருவரையும் பெற்று பெயர் சொல்லும்
பெரு வாழ்வைப் பெற்று மனமகிழ்ந்தார்.

கடமைகள் செய்ததனால் கவலைகள் தான் மறந்தார்
மனையாள் உதவிடவே நெடுநாட்கள் தான் வாழ்ந்தார்
அன்பாய் உறவுகளை அரவணைத்தே வாழ்ந்ததனால்
வாழ்க்கை என்றதற்கு வழிகாட்டியாயிருந்தார்.

மென்பேச்சும் மென்நடையும் பொறுமைக்கு
இலக்கணமாய் பெருமையுடன் வாழ்ந்திட்டார்
நல்லவற்றைச் செய்து நலம் பெறவே வாழ்ந்ததனால்
எல்லோர் மனங்களிலும் இருக்கின்றார் மறையாமல்


பிறப்பவர் இறப்பதுவும் குழந்தைகள் வளருவதும்
இயற்கையின் செயலென்று இயம்பிடுதல் கூடும்
விருப்புடனே வாழ்ந்து பாசத்தைப் பகிர்ந்தவர்கள்-நெடுநாள்
இருப்பதைத் தான் இவ்வுலகம் விரும்பும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய் பிரகாசித்து அமர ஜோதியாய், அருட்பெரும் ஜோதியில் சங்கமமாகி விட்ட அமரர் திரு. செ.அரியநாயகம் அவர்களின் மறைவால் கலங்கிய வேளையில் எம் துயரில் பங்குகொண்டு, அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து எமக்கு பல வழிகளிலும் ஆறுதல் கூறியும், அநுதாபம் தெரிவித்தும், மலர் அனுப்பியும், உணவு வழங்கியும், உதவிகள் பல புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் யாவர்க்கும், மற்றும் T.V.I, CMR, உதயன், லங்காஸ்ரீ முதலான செய்தி ஊடகங்களுக்கும் இம்மலரை அச்சமைத்துத் தந்தவர்களுக்கும், எங்கள் உள்ளங்கனிந்த நன்றியை சமர்பிக்கின்றோம்.

-மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சைவ மகுடம்

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

ஏகம் பத்துறை எந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு வானாய் போற்றி

குவளைக் கண்ணி கூறன் காண்க
அவளும் தானும் உடனே காண்க

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org